நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றம்

நவீன அடிமைத்தனத்துக்கான குழு

# கிராமப்புற மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸில் உள்ள தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நவீன அடிமைத்தன அபாயங்கள் பற்றிய விசாரணை

## குறிப்பு விதிமுறைகள்

1. நவீன அடிமைத்தனத்துக்கான குழுவானது, கிராமப்புற மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸில் தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மற்றும் குறிப்பாகப் பின்வருபவர்கள் எதிர்கொள்ளும் நவீன அடிமைத்தன அபாயங்கள் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்கிறது:

a) விவசாயம், தோட்டக்கலை, இறைச்சி பதப்படுத்துதல் மற்றும் தற்காலிகப் புலம்பெயர் தொழிலாளர்களை நம்பியிருக்கும் பிற துறைகளில் பணிபுரியும் கிராமப்புற மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸில் உள்ள தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான அனுபவத்துடன் வாழ்பவர்கள்

b) கட்டாய உழைப்பு, ஏமாற்றி ஆள்சேர்ப்பு, பாலின அடிப்படையிலான வன்முறை, பாலியல் அடிமைத்தனம் மற்றும் தொழிலாளர் கடத்தல் போன்றவற்றின் நிகழ்வு, காரணங்கள் மற்றும் அளவு

c) ஊதியம், படிக்காசு (allowances), ஓய்வுத் தொகை (superannuation), விடுப்புக்கான உரிமைகள், தொழிலாளர்களின் இழப்பீடு, மற்றும் குறைவான ஊதியம், அதிகப்படியான பிடித்தங்கள் மற்றும் கடன் பத்திர ஏற்பாடுகள் போன்ற துண்டு வேலைச் சம்பளங்கள்

d) தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களைச் சுரண்டலுக்கு ஆளாக்கும் கட்டமைப்புக் காரணிகள்

e) தொழிலாளர் நிலைமைகள் மற்றும் நேரடி முதலாளிகள் மற்றும் தொழிலுக்கு அமர்த்தும் (labour hire) நிறுவனங்களின் தொழிலாளர் நடைமுறைகள், இரண்டையும் நிர்வகிக்கும் ஒழுங்குமுறைகளின் போதுமான தன்மை உள்ளிட்டவை

f) கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் பிற தனிப்பட்ட அடையாளங்களைப் பறிமுதல் செய்தல்

g) சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் உட்பட பணியிடச் சட்டங்களுக்கான

போதுமான அளவு  கண்காணிப்பு, இணக்கம் மற்றும் அமலாக்கம்

h) கல்வி, பயிற்சி மற்றும் கலாச்சாரத் திறன் தேவைகள் உட்பட, ஆபத்தில் உள்ள மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய, தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்க உள்ளூர் சமூகங்கள், நியூ சவுத் வேல்ஸ் அரசு முன்னணி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா சேவை வழங்குநர்களுக்குத் தேவையான ஆதரவு மற்றும் ஆதாரவளங்கள்

i) கிராமப்புற மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸில் உள்ள தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீது விசா அமைப்புகள் மற்றும் வேலை நிலைமைகளின் தாக்கம்

j) தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் தங்குமிடம், மருத்துவப் பராமரிப்பு மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் போதுமான அளவு அதிகார வரம்புக்கு இடையேயான/அரசுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் தரவுப் பகிர்வுகள்

k) மாநில அடிப்படையிலான தலையீடுகள் மூலம் தற்காலிகமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குச் சாத்தியமான பாதுகாப்புகள்

l) வேறு ஏதேனும் தொடர்புடைய விஷயங்கள்.

விசாரணைக்கான குறிப்பு விதிமுறைகள் 10 அக்டோபர் 2024 அன்று குழுவால் சுயமாகப் பரிந்துரைக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **Dr Joe McGirr MP** | சுயேச்சை (Independent) | *தலைவர்* |
| **Ms Jenny Leong MP** | பசுமைக் கட்சி (The Greens) | *துணைத் தலைவர்* |
| **Mrs Tina Ayyad MP** | முற்போக்குக் கட்சி (Liberal Party) | |
| **Hon Robert Borsak MLC** | துப்பாக்கி சுடுவோர், மீன் பிடிப்போர் மற்றும் விவசாயிகள் கட்சி (Shooters, Fishers and Farmers Party) | |
| **Hon Greg Donnelly MLC** | ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி (Australian Labor Party) | |
| **Hon Dr Sarah Kaine MLC** | ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி (Australian Labor Party) | |
| **Hon Aileen MacDonald MLC** | முற்போக்குக் கட்சி (Liberal Party) | |
| **Ms Lynda Voltz MP** | ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி (Australian Labor Party) | |